# யாழ்ப்பாணத் தமிழில் பால்காட்டும் பெயராக்க உருபுகள்

திருமதி.சிவராணி சிறீற்குணராசா.

## ஆய்வுச்சுருக்கம்

*'யாழ்ப்பாணத் தமிழில் பால்காட்டும் பெயராக்க உருபுகள்' என்னும் இவ்ஆய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமானது யாழ்ப்பாணத் தமிழில் வழங்கும் பால்காட்டும் பெயராக்க உருபுகளையும், அவை அடிச்சொல்லுடன் சேர்வதன் மூலம் தோன்றும் ஆக்கப் பெயர்களையும் ஒலிமாற்றம் மூலம் அமையும் ஆக்கப் பெயர்களையும் விவரித்துக் கூறுவதேயாகும். இவ்வாய்வானது ஓர் அமைப்பு முறையடிப்படையிலமைந்த விவரண ஆய்வாகும்.*

மொழியில் ஓர் தனி அடிச்சொல் அல்லது கூட்டு அடிச்சொல் மேலும் ஆக்க ஒட்டு ஏற்பதன் மூலமோ சொல்லில் உள்ள உயிர் ஒலியில் அல்லது மெய்யொலியில் மாற்றம் பெறுவதன் மூலமோ சொற்பெருக்கத் திற்கு இடமளிக்கின்றது. அடிச்சொல் லும் ஆக்க உருபும் ஒரே இலக்கண வகையைச் சேர்ந்தனவாகவோ வெவ்வேறு இலக்கண வகையைச் சேர்ந்தனவா கவோ இருக்கலாம். சில ஆக்க உருபுகள் அடிச்சொல்லின் இலக்கண வகையை மாற்றி விடுகின்றன. சில மாற்றுவ தில்லை ஒரு சொல்லுடன் ஒன்றும் பலவுமாக ஆக்க உருபுகள் சேர்ந்து புதிய சொற்கள் பிறப்பது பெரும்பான் மை வழக்காகும். இவ்வாறு ஆக்க உருபுகளைச் சேர்த்துச் சொற்களை ஆக்குதல் தமிழில் தொன்று தொட்டுக் கையாளப்பட்டு வந்த ஒரு சொல்லாக்க உத்திமுறையாகும். இங்கு யாழ்ப் பாணத் தமிழில் வழங்கும் பால்காட்டும் பெயராக்க உருபுகளும் அவை அடிச் சொல்லுடன் சேர்வதன் மூலம் தோன் றும் ஆக்கப் பெயர்களும் ஒலி மாற்றம் மூலம் அமையும் ஆக்கப் பெயர்களும் மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணத் தமிழில் ஆக்கப் பெயர்கள் பெயர், வினை, பெயரடை போன்றவற்றை அடியாகக் கொண்டு பிறக்கின்றன.

### பெயராக்க உருபுகள்

வெவ்வேறு வகையான சொற் களோடு- அன்,- ஆன், - அர்,- ஆர் -இ,-ஆள்,-ச்சி, - ஆடிச்சி -ஆத்தி, -ஆட்டி,-த்தி,- வன்,- வர்,-வி,- காரன், -காரர்,-காரி,-இ,-ஆள்,- ஆளி,-சாலி -மான், -வா.ர், -மாரி, -வந்தர், -வாதி, -பிள்ளை, -ஞன், -ஞர்,-நர், -னர் -கன், -கர், -கை, -கி, வன்,- -வர்,-வள், -வா போன்ற

உருபுகள் சேர்க்கப்படும் போது பால் காட்டும் ஆக்கப் பெயர்கள் உருவாக்கப்படு கின்றன.யாழ்ப்பாணத் தமிழில் பால் காட்டும் ஆக்க உருபுகள் அனைத்தும் சொற்களில் கடைசி உருபாகவே (ஒட்டாகவே) வருகின்றன.

**பெயரடி**

சில பெயரடிகள் ஆண்பால், பெண் பால் ஆகிய இரண்டினதும் உருபு களைப் பெறுகின்றன. பால்காட்டும் உருபுகளுள் பெண்பால் உருபுகள் பெயரடியைப் பொறுத்து வேறுபடு கின்றன.

-அன், -ஆன், -அர், -ஆர், -இ, -ஆள், -ச்சி, -ஆடிச்சி, -ஆத்தி, -ஆட்டி, -த்தி,

-அன், -ஆன், என்பன ஆண்பால் ஒருமையையும் -அர், -ஆர் என்பன ஆண் பால் -பெண்பால் பன்மையை யும் -இ -ஆள், -ச்சி, -ஆடிச்சி, -ஆத்தி, -ஆட்டி, -த்தி என்பன பெண்பால் ஒருமை ஆகிய இலக்கணப் பொருள்களை உணர்த்துகின்றன. இவ்வாக்க உருபுகள் பெயரடிகளோடு சேர்ந்து பிற ஆக்கப்பெயர்களை உரு வாக்குகின்றன.

பெயரடி +ஆக்கஉருபு>ஆக்கப்பெயர்

செகிடு +அன் / அர் / இ > செகிடன் / செகிடர் / செகிடி

விசர் + அன் / அர்/ இ >விசரன் / விசரர் / விசரி

காதல் +அன் / அர் / இ > காதலன் / காதலர்/காதலி

பிறத்தி + ஆன் / ஆர் / ஆள் >பிறத்தியான் / பிறத்தியார் /பிறத்தி யாள்

தீவு + ஆன் / ஆர் / ஆள் > தீவான் / தீவார் / தீவாள்

கட்டை + அன் / அர் / ச்சி > கட்டையன் / கட்டையர் / கட்டைச்சி

பேய் + அன் /அர் / ச்சி >பேயன் / பேயர் /பேச்சி

கரை + ஆன் / ஆர்/ ஆடிச்சி> கரையான் / கரையார் / கரையாடிச்சி

சீம் + ஆன் / ஆட்டி > சீமான் / சீமாட்டி

பண்டாரம் + த்தி > பண்டாரத்தி

மேலே காட்டிய எடுத்துக் காட்டு கள் போன்று பல பெயரடிகள் யாழ்ப்பா ணத்தமிழில் காணப்படுகின்றன. ஆண்பால், பெண்பால் ஆகிய ஆக்க உருபுகளை ஏற்கும் பெயரடிகளுள் பல மரியாதையற்ற பொருள் குறிக்கும் ஆண்பால் பன்மை, மரியாதையற்ற பொருள் குறிக்கும் பெண்பால் பன்மை, மரியாதைப் பொருள் குறிக்கும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் - பெண்பால் பொதுப்பன்மை ஆகிய உருபுகளைப் பெறுகின்றன.

மரியாதைப் பொருள் குறிக்கும் ஆண் பால் ஒருமை ஆக்க உருபு சந்தர்ப்பத் தைப் பொறுத்து, ஆண்பால் -பெண் பால் பொதுப்பன்மைப் பொருளையும் தருகின்றது. ஏற்கும் வினை முற்றி னைப் பொறுத்து வேறுபடுகின்றது.

எ.கா.

திருடர் வாறார் திருடர் வரீனம்
குருடர் போறார் குருடர் போயினம்

பால்காட்டும் ஆக்க உருபுகளைப் பெறுவனவற்றுள் சில பெயரடிகள் மட்டும் பெண்பால் ஆக்க உருபுகளை ஏற்பதில்லை.

எ.கா.

பெயரடி + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

மாடு + அன் / அர் > மாடன் / மாடர்

காடை + அன் / அர் > காடையன் / காடையர்

கிறுக்கு + அன் / அர் > கிறுக்கன் / கிறுக்கர்

மொறடு + அன் / அர் > மொறடன்/ மொறடர்

பனி + அன் / அர் > பனியன் / பனியர்

**-வன், - வர்**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் - வன் ஆக்க உருபும் ஆண்பால் - பெண் பால் ஒருமையை உணர்த்தும் - வர் ஆக்க உருபும் ஏனைய பெயர்களுடன் இணைந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றன.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

தலை + வன் / வர் > தலைவன் / தலைவர்

முதல் + வன் / வர் > முதல்வன் / முதல்வர்

ஒரு + வன் / வர் > ஒருவன் / ஒருவர்

**-வி**

- வி என்பது பெண்பாலை உணர்த்தும் ஆக்க உருபு ஆகும். இது தலை, மனை, துணை போன்ற பெயர்ச் சொற்களுடன் சேர்ந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

தலை + வி > தலைவி

மனை + வி > மனைவி

துணை + வி > துணைவி

**-இ**

- அம் ஈறு பெற்றுத்தமிழில் அமைந்தசொற்கள் இ விகுதி பெற்றுள்ளன. ஆண்பால் பெண்பால் ஆகிய இரு பாலையும் இவ் ஆக்க உருபு பிற பெயர்களோடு இணைந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர்+ஆக்க உருபு > ஆக்கப்பெயர்

ஞானம் + இ > ஞானி

தியாகம் + இ > தியாகி

பாவம் + இ > பாவி

**-ஆள்**

ஆண்பால், பெண்பால் ஆகிய இரு பாலையும் உணர்த்தும் - ஆள் என்னும் ஆக்க உருபு பிற பெயர்களோடு சேர்ந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்க உருபு > ஆக்கப்பெயர்

வேலை + ஆள் > வேலையாள்
கூலி + ஆள் > கூலியாள்

**-ஆளி**

-ஆளி என்பது ஆண்பால், பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்தும். இவ் ஆக்க உருபு பிற பெயர்களோடு இணைந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

கடன் + ஆளி > கடனாளி
குற்றம் + ஆளி > குற்றவாளி
கூட்டு + ஆளி > கூட்டாளி
முதல் + ஆளி > முதலாளி

**-சாலி**

-சாலி என்பது ஆண்பால், பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்தும் ஆக்க உருபாகும். இவ்வுருபு பிறபெயர்களோடு இணைந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

அனுபவம் + சாலி > அனுபவசாலி
குணம் + சாலி > குணசாலி
புத்தி + சாலி > புத்திசாலி
பொறுமை + சாலி > பொறுமைசாலி

**-மான்**

-மான் என்பது ஆண்பாலை உணர்த்தும் ஆக்க உருபாகும். இது பிற பெயர்களுடன் சேர்ந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்
கல்வி + மான் > கல்விமான்
பக்தி + மான் > பக்திமான்
நீதி + மான் > நீதிமான்
புத்தி + மான் > புத்திமான்

**-வான்**

-வான் என்பது ஆண்பாலை உணர்த்தும் ஆக்க உருபாகும். இது பாக்கியம், சத்தியம், புண்ணியம், யோக்கியம் போன்ற பெயர்ச் சொற்களுடன் இணைந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

புண்ணியம் + வான் > புண்ணியவான்
யோக்கியம் + வான் > யோக்கியவான்
சத்தியம் + வான் > சத்தியவான்
பாக்கியம் + வான் > பாக்கியவான்

**-மாரி**

-மாரி என்பது பெண்பாலை உணர்த்தும் ஆக்க உருபாகும். இது ஆண் என்ற சொல்லுடன் மட்டும் இணைந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்
ஆண் + மாரி > ஆண்மாரி

**-வந்தர்**

ஆண்பால் , பெண்பால் ஆகிய இரு பாலையும் உணர்த்தும் வந்தர் என்னும் ஆக்க உருபு செல்வம், தனம் என்ற பெயர்ச்சொற்களுடன் இணைந்து ஆக்கப்பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப் பெயர்

செல்வம் + வந்தர் > செல்வந்தர்
தனம் + வந்தர் > தனவந்தர்

**-வாதி**

ஆண்பால் , பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்துவதற்கு வாதி என்னும் ஆக்கஉருபு பயன்படுகின்றது. இது பிற பெயர்களோடு இணைந்து ஆக்கப் பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

அரசியல் + வாதி > அரசியல்வாதி
பயங்கரம் + வாதி > பயங்கரவாதி
சந்தர்ப்பம் + வாதி > சந்தர்ப்பவாதி
தீவிரம் + வாதி > தீவிரவாதி

**-ஞன், -ஞர்**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் ஞன்- என்பதும் ஆண்பால், பெண்பால் பன்மையை உணர்த்தும் -ஞர் என்பதும் பெயர்ச் சொற்களோடு சேர்ந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

கலை + ஞன் / ஞர் > கலைஞன் / கலைஞர்
கவி + ஞன் / ஞர் > கவிஞன் / கவிஞர்

**-பிள்ளை**

ஆண்பாலை உணர்த்தும் ஆக்க உருபான -பிள்ளை கணக்கு என்ற பெயர்ச் சொல்லுடன் இணைந்து ஆக்கப் பெயரை உருவாக்குகின்றது.

பெயர் + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

கணக்கு + பிள்ளை > கணக்குப்பிள்ளை

**வினையடி**

பெயரடிகள் போன்று வினை யடிகளும் பால் காட்டும் ஆக்க உருபுகளைப் பெறுகின்றன.

- அன் / - ஆன், - அர் / - ஆர், - ஆத்தி, - ச்சி

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் - அன், - ஆன் என்னும் ஆக்க உருபும், ஆண்பால் - பெண்பால் பன்மையை உணர்த்தும் - அர், - ஆர் என்னும் ஆக்க உருபும் பெண்பாலை உணர்த்தும் - ஆத்தி, - ச்சி என்னும் ஆக்க உருபும் வினைச் சொற்களோடு சேர்ந்து ஆக்கப் பெயர்களை தோற்றுவிக்கின்றன.

வினையடி + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்

கொதி + அன் / அர் > கொதியன் / கொதியர்
தட்டு + ஆன் / ஆர் / ஆத்தி > தட்டான் தட்டார்/ தட்டாத்தி

**-நர் - னர்**

-நர், -னர் என்னும் ஆக்க உருபுகள் ஆண்பால், பெண்பால் ஆகிய இருபாலையும் உணர்த்துகின்றன. இவ்வுருபுகள் வினைகளுடன் சேர்ந்து ஆக்கப் பெயர்களைத் தருகின்றன.

வினை + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்.

இயக்கு + நர் / னர் > இயக்குநர் / இயக்குனர்
பெறு + நர் /னர் > பெறுநர் / பெறுனர்
பொருத்து + நர்/ னர் > பொருத்துநர் / பெருந்துனர்
எழுது + நர்/ னர் > எழுதுநர் / எழுதுனர்

**-கன் , -கர் - கை - கி**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் -கன் என்னும் ஆக்க உருபும் ஆண்பால் - பெண்பால் பன்மையை உணர்த்தும் கர் என்னும் ஆக்க உருபும் பெண்பால் ஒருமையை உணர்த்தும் -கை, -கி என்பவையும் நடி, பாட என்னும் வினையடி, வினையெச்சம் ஆகியவற்றுடன் சேர்வதனால் பெயராக மாற்றமடைகின்றன.

வினை + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்
நடி + கன் / கர்/ கை > நடிகன் / நடிகர் /நடிகை

வினையெச்சம் + ஆக்கஉருபு > **ஆக்கப்**பெயர்
பாட + கன் / கர் / கி > பாடகன் / பாடகர் / பாடகி

**-ஞன், -ஞர்**

ஆண்பால் ஒருமையை உணர்த்தும் -ஞன் என்பதும் ஆண்பால் - பெண்பால் பன்மையை உணர்த்தும் -ஞர் என்பதும் அறி எனற வினைச் சொல்லுடன் சேர்ந்து ஆக்கப் பெயரை உருவாக்குகின்றது.

வினை + ஆக்கஉருபு > ஆக்கப்பெயர்
அறி + ஞன் / ஞர் > அறிஞன் / அறிஞர்

**பெயரடை அடி**

யாழ்ப்பாணத்தமிழில் பெயரடிகள், வினையடிகள் போன்று பெயரடை அடிகள் சிலவும் பால்காட்டும் ஆக்க உருபுகளைப் பெறுகின்றன.

**-வன் - வர்,- வள் ,- வா**

-வன், -வர், -வள், -வா போன்ற உருபுகள் முறையே ஆண்பால், மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை, பெண்பால், மரியாதைப் பொருள் தொனிக்கும் பெண்பால் ஒருமை ஆகிய இலக்கணப் பொருள்களை உணர்த்துகின்றன. இவை பெயரடை அடிகளுடன் சேர்ந்து ஆக்கப்பெயர்களை உருவாக்குகின்றன.

பெயரடை அடி + ஆக்க உருபு > ஆக்கப்பெயர்

பெரிய + வன் / வர் / வள்/ வா> பெரிய வன் / பெரியவர் / பெரியவள் / பெரிய வா

சின்ன + வன் /வர்/ வள் / வா > சின்ன வன் / சின்னவர் / சின்னவள் / சின்ன வா

நல்ல + வன் / வர் / வள் / வா> நல்லவன் /நல்லவர் / நல்லவள் / நல்லவா

இவ்வாறு ஆக்கப் பெயர்களின் அமைப்பு, அவற்றின் வழக்கு போன்ற வற்றை ஆராய்வதன் மூலம் தமிழ் மொழியின் தொழிற்பாடு பற்றிய அறிவு தெளிவடைகின்றது. சமுதாய வளர்ச்சியின் காரணமாகத் தோன்றும் புதிய எண்ணங்களையும் கோட்பாடு களையும் வெளியிடுவதற்கு ஏற்ற புதிய சொற்களையும் முறைப்படி உருவாக் கிக் கொள்ள முடியும்.

## உசாத்துணை நூல்கள்


1. கோதண்டராமன் , பொன் . (1973), இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி 1 பாவை பிரிண்டர்ஸ் (பிர லிட், சென்னை)

2. கோதண்டராமன், பொன், (1981), இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி11 பாவை பிரிண்டர்ஸ் ( பிர லிட் . சென்னை )

3. தமிழியல் ஆய்வு இன்றைய போக்குகள், (2002), முதுபெரும் பேராசிரியர், முனைவர் சு.இராசாராம் அவர்களின் மணிவிழா ஆண்டுச் சிறப்பு வெளியீடு. பதிப்பாசிரியர்கள் , வே. சா. அருள்ராஜ், கா. இராமையா, இரா. முரளிதரன் , இரா. அறவேந்தன் , திருமதி செண்பகம் சுப்பையா அறக்கட்டளை தஞ்சாவூர் – 5

4. Suseendirarajah,S. (1993), Jaffna Tamil , Phonology and Morphology, University of Jaffna Publication.

5. Suseendirarajah, S. (1998), Studies in Srilankan Tamil linguistics and culture. Professor Swaminathan. Suseendirarajah sixty fifth birthday commemoration volume (eds), Balasubramanian, K. Ratnamalar, R. Subathini.